# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

# ஆண்டவரின் சிலுவையின் அன்பு இருதயத்தில் செதுக்கப்பட்டது.

## 2018 ஈஸ்டர் கலைநிகழ்ச்சி, ‘ஆண்டவரின் சிலுவை’



மார்ச் 31 அன்று, வெள்ளிக்கிழமை முழு இரவு ஆராதனையின் இரண்டாவது பகுதியில், தலைமை ஆலயத்தில் விசேஷித்த மேடையில், “ஆண்டவரின் சிலுவை” என்ற தலைப்பின்கீழ் 2018 ஈஸ்டர் கலை நிகழ்ச்சிகள் காண்பிக்கப்பட்டன.

ரஷ்யா, கென்யா, பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் உள்பட அநேக வெளி நாடுகளிலிருந்து வந்திருந்த போதகர்கள் மற்றும் விசுவாசிகள் கலைநிகழ்ச்சியில் பங்குப்பெற்றனர்; அது GCN மூலமாகவும், இணையதளத்திலும் (www.gcntv.org) நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. ஆண்டவரின் ஊழியம், சிலுவையில் அறையப்படுதல், உயிர்த்தெழுதல், மற்றும் பரமேறுதல் அனைத்தும் மிகவும் விளக்கமாக காட்சியில் காண்பிக்கப்பட்டது.

கலைநிகழ்ச்சி அமைப்பை சார்ந்த பரலோக ஒலி பாடகர் குழு, பரலோக நடன குழு, ஒளியின் ஒலி பாடகர் குழு, கிரிஸ்டல் பாடகர் குழு, வல்லமை நடனக்குழு, ஒருங்கிணைந்த பாடகர் குழு மற்றும் திருச்சபையின் மற்ற சில விசுவாசிகளும் உற்சாகத்தோடு நடித்தனர். ஐக்கிய துதி குழு, ஐக்கிய இசை வாத்தியகுழு, நிசி ஆர்க்கெஸ்ட்ரா, மற்றும் இம்மானுவேல் பாடகர் குழுவும் இணைந்து பாடல் இசையில் உதவி செய்தனர். கூடுதலாக, திருச்சபையின் அநேக விசுவாசிகள் ஆடற்கலை, மேடை ஆயத்தம், உடைப்பெட்டி, நாடக மேடைப் பொருள்கள், ஒப்பனை, வேலையாட்கள் செயல்பாடு என பல்வேறு வேலைகளில் தங்கள் பங்களிப்பை அளித்தனர். இந்த கலைநிகழ்ச்சிகளை சிறப்பாக வழங்கும்படி வெளிநிறுவன வேலையாட்கள் உள்பட ஏறக்குறைய 300க்கும் அதிகமானோர் இணைந்து பணியாற்றினர்.

நிகழ்ச்சி 1ல், இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற காத்திருந்து, அதற்காக ஜெபத்துடன் ஆயத்தமான இளம் வயது இயேசுவை காண்பித்து “ஆண்டவரின் சிலுவை” என்ற தலைப்பின்கீழ் நாடகம் ஆரம்பமானது. அதன் பிறகு மேசியாவிற்காக காத்திருந்த மக்களின் காட்சிகள்; ஆண்டவரின் அன்பு; அவருடைய ஜெபம்; அவருடைய ஊழியம்; கடைசி பஸ்கா மற்றும் சிலுவையின் பாதை போன்ற காட்சிகள் பின்தொடர்ந்தது.

நிகழ்ச்சி 2ல், “ஆண்டவரின் உயிர்த் தெழுதல்” யூதாஸ்காரியோத்தின் மரணத்தை விளக்கியது; ஆண்டவரை சிலுவையில் அறைந்த பின்பும் அவரை நேசித்தவர்கள்; ஆண்டவரின் உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் போன்ற காட்சிகள் காண்பிக்கப் பட்டது.

திருச்சபையின் கலைநிகழ்ச்சிகள், விசுவாசிகளின் இருதயங்களில் பெரிய அசைவை ஏற்படுத்திய தேவன் தந்த மான்மின் பாடல்களினால் தனித்தன்மை யோடு காண்பிக்கப்பட்டது. இந்த ஈஸ்டர் கலைநிகழ்ச்சிகளுக்காக தேவன் புதிதாய் ஆறு பாடல்களை தந்தார்: யாருமே அறியாரே; சீஷர்கள்; சிலுவை; பிற்பாடு, யூதாஸ்காரியோத்து; அவர் உயிர்த்தெழுந்தார்; பிற்பாடு, சீஷர்கள். பாடல் வரிகளிலும், இராகத்திலும் பதிந்துள்ள கர்த்தருடைய எல்லையில்லாத அன்பை விசுவாசிகள் உணர்ந்தனர்; இரட்சிப்பின் கிருபை, உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சி, பரலோகத் திற்கான நம்பிக்கைக்காக நன்றியினால் நிரப்பப்பட்டார்கள்.

ஏப்ரல் 1 அன்று, ஈஸ்டர் ஞாயிறு காலை ஆராதனையில், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் “உயிர்த்தெழுந்த ஆண்டவர்” என்ற செய்தியை 1 கொரிந்தியர் 15:41–44ம் வசனங்களின் அடிப்படையில் பிரசங்கித்தார். அவர் உயிர்த்தெழுந்த ஆண்டவரிடத்திலிருந்து நாம் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை விளக்கினார்: முதலாவது, நித்திய வாழ்வு உண்டு; இரண்டாவது, கர்த்தருக்குள் நம்முடைய ஊழியத்தில் கனிகள் பின் தொடரவேண்டும்; மூன்றாவது, கர்த்தருக்குள் நாம் படுகின்ற பாடுகளெல்லாம் மகிமையாய் மாறும். அதே நாளில், ஞாயிறு மதிய ஆராதனையில், விசுவாசிகள் பரிசுத்த திருவிருந்தில் பங்குப்பெற்றனர்; தங்கள் இருதயத்தின் ஆழத்தில் ஆண்டவரின் அன்பையும் தியாகத்தையும் செதுக்கிக் கொண்டனர்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# உலகம் அவர்களுக்குப் பாத்திரமாய் இருக்கவில்லை

“விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்... உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்திரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்”
(எபிரெயர் 11:33–38).

•••

எபிரெயர் 11 ஆம் அதிகாரம், “விசுவாசத்தின் அதிகாரம்” என்றழைக்கப்படுகிறது. அது தங்கள் விசுவாசத்தினால் தேவனைப் பிரியப்படுத்திய விசுவாசத்தின் முற்பிதாக்களைப் பற்றி சித்தரிக் கிறது. அவர்கள் தேவன் பேரிலுள்ள தங்கள் அன்பின் விளைவாக மரணத்தை கண்டு பயப்படவில்லை. அவர்களால் தேவனுக்காக எல்லாவற்றையும் கொடுக்க முடிந்தது. விசுவாசத்–துடன் நீதியை தைரியமாய் நடப்பித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாய் இருக்க வில்லை.

பழைய ஏற்பாட்டில் தோன்றிய விசுவாசத்தின் முற்பிதாக்களை நாம் ஆய்ந்தறிவோம். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. விசுவாசத்தினாலே அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தினார்கள்.

## 1. பயத்தைப் புறம்பே தள்ளும் பூரண அன்பு

ஆதி திருச்சபையினர் பட்டினியான சிங்கங்களால் சாப்பிடப்பட்டபோதும், பயங்கரமான உபத்திரவங்–களில் தலை வெட்டப்பட்டபோதும், இயேசு கிறிஸ்துவை மறுதலிக்கவுமில்லை, தேவனைவிட்டு விலகவுமில்லை. அவர்களால் எப்படி இவ்வாறு செய்ய முடிந்தது?

காரணம் அவர்கள் 1 யோவான் 4:8ல், “அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப் படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல” என்று வாசிக்கிறபடி தேவனுக்காக பரிபூரண அன்பை கொண்டிருந்தனர்.

பழைய ஏற்பாட்டின் காலத்தில், யோபு உத்தமனும் தேவனுடைய பார்வையில் கபடற்றவனுமாய் இருந்தான். அவன், “நீதிமான்” என்று அழைக்கப் பட்டான். இருப்பினும் அவனுடைய இருதயத்தின் ஆழத்தில் பயமும் கவலைகளும் இருந்தன (யோபு 3:25). அவன் புடமிடுதல்களின் வழியாக தேவனுடைய அன்பை பரிபூரணமாக உணர்ந்த பின்னரே அவன் தைரியமடைந்து இருமடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான்.

அப்படியானால், நாம் பயமில்லாமல் தேவன் பேரில் அன்போடு தைரியமாய் நடப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? நாம் செய், செய்யாதே, கைக்கொள், விட்டுவிடு என்று நமக்குச் சொல்கிற தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். அது தான் தேவன் பேரில் உள்ள உண்மையான அன்பு. மேலும் அந்த அன்பு அதிக பரிபூரணமாகும் போது, பயம் நீங்கும்; நாம் தைரியமாய் நீதியை நடப்பிக்க முடியும் (1 யோவான் 5:3; 3:21,22).

## 2. உலகம் அவர்களுக்குப் பாத்திரமாய் இராத விசுவாசத்தின் முற்பிதாக்கள்

### 1) அக்கினியின் பதிலை கீழே கொண்டு வந்த எலியா

இஸ்ரவேலின் வடக்கு சாம்ராஜ்யத்தின் தீர்க்க தரிசியாகிய எலியா பாகால் தீர்க்கதரிசிகள் மற்றும் தோப்பு விக்கிரக தீர்க்கதரிசிகள் 800 பேருக்கு விரோதமாக மோதிய போது அக்கினியின் பதிலை கீழே கொண்டு வந்தார் (1 இராஜாக்கள் 18). அவர் தைரியமாக நீதியை நடப்பித்தார். அவன் ஒருவனாய் இத்தனை பெரிய கூட்டத்திற்கு முன்னர் நின்றபோதும், விக்கிரக ஆராதனையில் விழுந்துபோன இஸ்ரவேலருடைய இருதயத்தை தேவனிடத்திற்கு திருப்பும்படியான ஊக்கமான வாஞ்சை அவனுக்கு இருந்தது. அவன் மெய்யான ஒரே தெய்வம் தேவனே என்ற ஆழமான விசு வாசத்தை கொண்டிருந்தான். தேவனுக்காக ஊக்கமான அன்பும் அவனுக்கு இருந்தது. நீங்கள் தேவனையும் ஆண்டவரையும் எலியாவைப் போல நேசித்தால், கூடாத காரியம் ஒன்று–மில்லை.

### 2) சூழ்நிலையின் நிஜத்தன்மையை பாராத எலிசா

எலியாவின் சீஷனாகிய எலிசா, எலியாவின் ஆவியை இரண்டத்தனையாய் பெற்றான். பல நிகழ்வுகளில் இஸ்ரவேல் தேசத்தின் எதிரி நாடான சீரிய ராஜாவின் தந்திரங்களை தோற்கும்படி செய்தான். இதை அறிந்த சீரியாவின் ராஜா எலிசாவை கொல்ல சதி திட்டம் தீட்டினான். அவன் குதிரைகளையும் இரதங்களையும் பெரிய இராணுவத்தையும் அங்கு அனுப்பினான்; அவர்கள் இரவிலே அங்குவந்து பட்டணத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். எலிசாவின் வேலைக்காரன் அவர்களை கண்டு பயந்தான்.

ஆயினும், எலிசா அவர்களோடிருப்பவர்களை காட்டிலும் நம்மோடிருப்பவர்கள் அதிகம் என்று அவனைப் பயப்படாமல் இருக்கும்படி கூறினான். தேவன் அந்த வேலைக்காரனின் ஆவிக்குரிய கண்களைத் திறந்தார். அவன் எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான இரதங்களும் குதிரை–களும் மலை முழுவதும் நிற்கக் கண்டான். முடிவிலே, இஸ்ரவேல் சீரியாவை தோற்கடித்தது; அதன்பின் அவர்கள் இஸ்ரவேலை ஒருபோதும் தாக்கவில்லை (2 இராஜாக்கள் 6).

உண்மையான விசுவாசமுள்ளவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவனைப் பார்ப்பார்கள், ஆகவே எத்திக்கிலும் கஷ்டங்களால் சூழப்பட்டாலும் அவர்கள் பயப்படுவதில்லை. அவர்களது எத்தகைய ஜெபங்களுக்கும் பதிலளிக்கிற தேவனில் அவர்கள் விசுவாசமாயுள்ளார்கள். ஆகவே அவர்கள் தைரியமாக கேட்டு விசுவாசமுள்ள ஜெபத்தினால் தேவனுடைய வல்லமையை கீழே கொண்டு வருவதால் தங்கள் பிரச்சனையை தீர்த்துக் கொள்வார்கள்.

### 3) தன் ஜனத்தை காப்பாற்றிய எஸ்தர்

எஸ்தர் மூன்றாம் அதிகாரத்தில், அகாஸ்வேரு ராஜாவால் ஆமான் நேசிக்கப்பட்டான். இருப்பினும், அவன் அகாஸ்வேருவின் ராஜ்யத்தில் எங்குமுள்ள யூதர்கள் அனைவரையும் அழிக்க வகைத் தேடி–னான். ஆகவே, மொர்தெகாய் அத்தேசத்தின் யூத ராஜாத்தியான எஸ்தரிடம், அவள் தன் ஜனத்தைக் காப்பாற்றும்படி ராஜாவிடம் கேட்கும்படி சொன்னான்.

இதைக் குறித்து அறிந்தப் பின்னர், எஸ்தர் தன் ஜனங்களுக்காக மூன்று நாள் உபவாசித்து, “நான் செத்தாலும் சாகிறேன்” என்ற உறுதியுடன் ராஜாவுக்கு முன்பாக வந்தாள். தேவனுடைய கிருபையால், அவள் ஆமானின் சதித்திட்டத்தை வெளிப்படுத்தி, தன் ஜனங்களை காப்பாற்றினாள்; ராஜாவினிடத்திலிருந்து அதிக அன்பை பெறலானாள்.

வாழ்வா சாவா என்பதின் இடையிலும்கூட, அவள் பிரச்சனையை தீர்க்கிறவரான தேவனை சார்ந்துக்கொண்டாள். தேவன் அவளுடைய கிரியையில் பிரியங்கொண்டு, எல்லாவற்றையும் நன்மையாக முடியப்பண்ணினார். அவர் துரதிர்ஷ் டத்தை அதிர்ஷ்டமாக மாற்றி, தேவனுடைய மகிமை வெளிப்படும்படிக்கு மிகப் பெரிய அளவில் கிரியை செய்தார்.

### 4) மரணத்தின் முன்பும் சமரசமாகாத தானியேல்

பாபிலோன் ராஜாவாகிய தரியு, தேவனை சேவிக்கிற யூதாவின் ராஜ்யத்திலிருந்து தானியேல் வந்திருந்தபோதும்கூட, தன் ராஜ்யத்தின் முழுமைக்கும் அவனை அதிகாரியாக ஏற்படுத்த விரும்பினான். அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் அவன்மீது பொறாமை கொண்டு சதிதிட்டம் தீட்டினார்கள். அவர்கள் ராஜாவிடம் ராஜாவாகிய உம்மைத் தவிர எந்த தேவனை யானாலும், மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம் பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதி செய்ய வேண்டும் என்றார்கள்.

தேவன் பேரிலான தானியேலின் அன்பு, எப்படியிருந்தாலும், உண்மையுள்ளதாயும், பூரண–மானதாயுமிருந்தது. ஆகவே அவன் தொடர்ந்து மரணத்தைக் கண்டு பயப்படாமல் தேவனை நோக்கி ஜெபித்தான். அவனை இறுதியாக சிங்கக் கெபிக்குள் போட்டார்கள்; ஆனால் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாய்களை கட்டிப் போட்டார். அவன் பரிபூரணமாக பாதுகாக்கப்பட்டான், அவன் சேதப்படவேயில்லை (தானியேல் 6). உயிருக்கு ஆபத்தான மரண பயமுறுத்தல்களிலும்கூட, அவன் சமரசம் செய்யவில்லை, ஆனால் தேவனுக்கு முன்பாக அவன் தன் நீதியை உறுதியாய் பற்றிக்கொண்டான். விளைவாக, அவன் தேவனுடைய மகிமையை பெரிதாய் விளங்க வெளிப்படுத்தினான்.

### 5) தங்கள் விசுவாசத்தை மாறாமல் காத்துக் கொண்ட தானியேலின் மூன்று நண்பர்கள், சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு பொற்சிலையை உண்டுபண்ணி, அந்தப் பொற்சிலைக்கு முன்பு பணிந்து ஆராதியாதவன் எவனோ அவன் அக்கினிச் சூளைக்குள் போடப் படுவான் என்று கட்டளையிட்டான் (தானியேல் 3). தானியேலின் மூன்று நண்பர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் விக்கிரக ஆராதனை செய்யாதே என்று சொல்லுகிற தேவனுடைய கட்டளையை மீறவில்லை. அவர்கள் அந்த சிலைக்கு முன் பணியவில்லை. இறுதியாக, அவர்கள் ராஜாவிடம் கொண்டுச் செல்லப்பட்டனர். ராஜா, பின்பு, அவர்கள் இப்போது பணிந்து கொண்டால் அவர்களை காப்பாற்றுவேன் என்று சொல்லி அவர்களுக்கு வேறொரு வாய்ப்பைத் தந்தான். ஆனால் அவர்கள் பணிந்துப் போகவில்லை.

அவர்கள் மரணத்தின் முன்பும்கூட தைரியமாக இருந்தனர். காரணம் தேவன் பேரிலான அவர்களது பூரண அன்பு அவர்கள் பயத்தைப் புறம்பே தள்ளியது. அவர்கள் பின் இறுதியாக ஏழு மடங்கு சூடாக்கப்பட்ட அக்கினி சூளைக்குள் தூக்கி எறியப்பட்டார்கள். இருப்பினும், தேவன் அவர்களைப் பாதுகாத்தார், ஆகவே அக்கினி அவர்கள் சரீரங்கள் மீது பெலன்கொள்ளவில்லை. அவர்கள் தலையிலிருந்த முடியிலும் கருகிய வாடைகூட அடிக்கவில்லை. இவ்வாறு, அவர்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தி, அதிக அங்கீகாரம் பெற்றனர்.

### 6) கிதியோனின் மனிதர்கள், சிறுவன் தாவீது, யூதாவின் ராஜாவாகிய யோசபாத்

நியாயாதிபதிகள் 7ல், மீதியானியர்கள் கடற்கரை மணலத்தனையாய் திரளாய் இருந்த–படியால், யுத்தம் பார்ப்பதற்கு இஸ்ரவேலருக்கு சாதகமல்லாததாய் இருந்தது. ஆனால் தேவன் நியாயாதிபதியாகிய கிதியோனிடம் அவனோடு யுத்தத்திற்கு போகிற மனிதர்களுடைய எண்ணிக் கையை குறைக்கும்படி அவனிடம் சொன்னார். கிதியோன் அவருக்குக் கீழ்ப்படிந்து, எண்ணிக் கையை குறைத்து, தேவனால் ஆலோசனை வழங்கப்பட்டபடியே தைரியமாய் யுத்தம் செய்தான். அப்படிச் செய்ததால், இறுதியில் அவன் வெற்றியடைந்தான்.

1 சாமுவேல் 17 ஆம் அதிகாரம் தாவீது சிறுவ–னாயிருக்கையில் நடந்த சம்பவத்தை விளக்குகிறது. அவன் தேவனை விசுவாசித்தபடியால், பெலிஸ்தரின் ராணுவத்தில் இராட்சதனாயிருந்த கோலியாத்துக்கு விரோதமாக வந்தான். முதலாவது முயற்சியிலேயே கவன்கல்லை எறிந்தபோது அது பெலிஸ்திய மனிதனின் நெற்றியிலே பட்டது. யூதாவின் ராஜாவாகிய யோசபாத் அண்டைநாட்டுப் படை தெற்கு யூதா சாம்ராஜ்யத்தை முற்றிகைப் போட்ட போது தன் ஜனங்களோடுகூட உபவாசித்து தேவனிடத்தில் ஜெபித்தான். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவன் பரிசுத்த வஸ்திரங்கள் தரித்து தேவனை துதிக்கும் பாடகர்களை தன் படைக்கு முன்பதாக போகும்படி செய்தான். தேவன் இந்த விசுவாச கிரியையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஜெயமளித்தார் (2 நாளாகமம் 20).

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, எந்தப் பயத்தையும் புறம்பே தள்ளும் பரிபூரணமான அன்போடுகூட நீங்கள் தைரியமாக செயல்படு வீர்கள் என்று நான் நம்புகிறேன். இப்படிச் செய்வதால் கூடாதது ஒன்றுமில்லாத விசுவாசத்தை நீங்கள் அடையும்படி ஆண்டவருடைய நாமத்தினால் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]
“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

ஆண்டவருக்காக எங்களது நம்பிக்கை

## "மான்மின் உலகளாவிய பணித்தளத்தில் இணைவதில் நான் மிகவும் சந்தோஷமாயுள்ளேன்"


சகோதரர் செங்கியுள் லீ, வயது 20, சியாங்ராய் மான்மின் சபை, தாய்லாந்து

நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது எனது பெற்றோர்கள் தாய்லாந்துக்கு மிஷனரிகளாக அனுப்பப்பட்டனர். எனது குடும்பம் அத்தேசத்துக்குச் சென்றது. முதலாவது எனக்கு எதுவுமே அறிமுகமாகாததாக இருந்தது. ஆனால் நான் தலைமை போதகர் அறிவர். ஜோராக் லீ அவர்கள் எங்களுக்காக எப்போதும் ஜெபித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்திருந்ததால் மகிழ்ச்சியோடு புதிய சூழ்நிலைக்குள் இருக்க பழகிக்கொண்டேன்.

தாய்லாந்தில் உள்ள மக்கள் வறுமையில் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு தூய்மையான ஆவி இருந்தது. அவர்கள் பரிசுத்தமாகுதலின் செய்தியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். அவர்கள் போதகர் ஜேஷன் லீ, எனது தகப்பனார், அறிவர். லீ அவர்கள் ஜெபித்ததான கைக்குட்டையை வைத்து, கைக்குட்டை சுகமாகுதலின் கூட்டங்களை நடத்தியபோது அவர்கள் தங்கள் வியாதிகளிலிருந்தும் சுகமானார்கள் (அப். 19:11–12).

எனக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு. நாங்கள் எங்கள் பெற்றோர்களின் ஊழியத்தில் உதவி செய்தோம். எனது மூத்த சகோதரர் செங்ஹீன் லீ ஆராதனை வேளையில் கிட்டார் இசைத்தும், பாடகர் குழுவின் தலைவராகவும் செயல்பட்டார். இப்போது அவர் இராணுவத்தில் இருக்கிறார். எனது மற்றொரு மூத்த சகோதரர் ஆராதனை குழுவின் தலைவராகவும், கீபோர்டு இசைக்கிறவராகவும் உள்ளார். அவர் இந்தோசீனா கருத்தரங்கில் ஆங்கில மொழிபெயர்ப்பாளராக சேவை செய்தார். அவர் இளம் வாலிபர் ஆண்கள் பணித்தளத்தின் தலைவராகவும் உள்ளார்.

இளம் வாலிபர் பணித்தளத்தின் தலைவராக நான் எங்களது அங்கத்தினர்களுடன் மான்மின் மத்திய திருச்சபையின் அதே ஆவிக்குரிய ஓட்டத்தில் ஓட முயற்சித்தேன். இப்போது எங்களது இளம் வாலிபர்கள் புது எருசலேம் பிரசாரம் 2018ல் பங்குப்பெற்று, பரலோகத்திற்கான நம்பிக்கையுடன் முன்பைவிட அதிகமான ஓடுகின்றனர். தேவனால் கொடுக்கப்பட்ட இப்பேர்பட்ட கடமைகளை நான் ஜெபத்தின்மூலமாக நிறைவேற்றுகிறேன்; நான் கல்லூரிக்குச் செல்வதற்கு முன்பு எனது நாளை காலை ஜெபக்கூட்டத்துடன் துவங்குகிறேன், இரவில் தானியேல் ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெறுகிறேன்.

மேலும் நான் செவ்வாய் துதி ஆராதனையில் பாடல் ஆராதனையை நடத்துகிறேன். சுவிசேஷம் சொல்லும் மக்களுக்கு சபையின் கொரிய வகுப்பில் பாடம் நடத்துகிறேன். கூடவே இந்தோசீனா போதகர் கருத்தரங்கில் நான் தாய் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பாளராக சேவை செய்கிறேன். நான் தலைமைப் போதகருடைய பிரசங்கங்களை ஞாயிறு ஆராதனையிலும், வெள்ளி முழு இரவு ஆராதனையிலும் தாய்மொழியில் மொழிபெயர்க்கிறேன். நான் மக்கள் தலைமை போதகருடைய பிரசங்களிலிருந்து அதிகமான கிருபையைப் பெற்று கண்ணீர் சிந்துவதைப் பார்க்கும்போது மிகப் பெருமையாக உணர்கிறேன். இப்பேர்பட்ட மதிப்புமிகுந்த வாழ்வு வாழ வைத்ததற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

கடைசிக்காலத்தில் சகல தேசத்தின் சகல ஜனங்களை இரட்சிப்பின் பாதைக்கு வழிநடத்துகிற தலைமை போதகருடைய ஊழியத்திற்கு என்னால் உதவ முடிகிறதே என்று நினைக்கும்போதே, என் இருதயம் நிரம்பி, நான் பெலப்படுத்தப்பட்டேன். ஆண்டவருக்காக மதிப்பு மிகுந்த வாழ்வு வாழச் செய்து, என்னை ஆசீர்வதித்த தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

## "நான் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தபோது எனது கனவுக்கு அருகாமையில் சேர்க்கப்பட்டேன்!"


சகோதரி ஜீயே சியோ, வயது 29, இளம் வாலிபர் பணித்தளம், மான்மின் மத்திய திருச்சபை

2006ல், நான் மான்மினில் எனது விசுவாச வாழ்வை தொடங்கி நடத்த ஆரம்பித்தேன். தலைமை போதகருடைய பிரசங்கங்களின் மூலமாக உண்மையான விசுவாசத்தை குறித்துக் கற்றுக்கொண்டேன்.

நான் 9 ஆம் வகுப்பு படிக்கும்போது அயல்தேச மொழி மேல்நிலை பள்ளியின் நுழைவு தேர்வுக்காக ஆயத்தமாக தொடங்கினேன். அது மிகத் தாமதமாக கருதப்பட்டது. நான் தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண்டவருடைய நாளிலும்கூட செல்ல வேண்டியிருந்தது. ஆனால் நான் சபைக்குச் சென்றேன், காரணம் நான் அது தேவனுடைய ஆவிக்குரிய அதிகாரத்தை அங்கீகரிப்பதெனவும், ஆசீர்வாதத்தின் வழி எனவும் அறிவேன். இறுதியாக, தேவன் நான் க்வாசியோன் அயல்மொழி மேல்நிலை பள்ளியின் ஆங்கில துறையில் சேர்க்கை பெறும்படி ஆசீர்வதித்தார். அதிகமானோர் அதில் விண்ணப்பித்திருந்தார்கள்.

2014 பிற்பகுதியில், எனது கல்லூரி பட்டமளிப்பு விழாவிற்கு முன்னதாக, நான் கொரிய சமூக விளம்பர நிறுவனத்தில் நுழைந்தேன். அது வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சகத்தின்கீழ் இருந்தது. நான் அதின் எழுத்து தேர்வையும் நேர்காணலையும் தலைமை போதகருடைய ஜெபத்தின் மூலமாக கடந்து சென்று தேர்ச்சி பெற்றேன்.

ஒரு நாள், எனது அலுவலகத்தில் நடைபெற்ற விருந்தில் எனது பணி முதல்வர் எங்களுடன் இணைந்துகொண்டார். அங்கே சீட்டுப்போடப்பட்டது; சீட்டுப் போட்டு ஜெயித்தவர் பணி முதல்வரிடமிருந்து, மதுபானத்தை ஒரு கண்ணாடி குவளையில் பெற்று, குடித்துவிட்டு, அதன் பின்னர் பரிசு வாங்க வேண்டும். அந்த நேரத்தில், சீட்டு என் பேரில் விழுந்தது; ஆனால் நான் அவரிடம் மதுபானம் குடிக்கமாட்டேன், அதைப் புரிந்துக்கொள்ளுமாறு கேட்டு, அதைப் புறக்கணித்தேன். எனது பணி முதல்வருக்கு முன்பாக வருந்தினேன். ஆனால் நான் அதைக் குடித்தால் நான் அதைவிட மிக அதிகமாக தேவனுக்கு முன்பாக மனம் வருந்த வேண்டும் என்று எனக்குத் தெரியும். இப்பேர்பட்ட மாறுத்தரம் என்னிடத்திலிருந்து வந்திருந்தாலும்கூட, எனது அலுவலகத்திலுள்ளவர்கள் என்னை புரிந்துக்கொண்டு என்னை விரும்பினர். இது அனைத்தும் தேவனுடைய கிருபையாலே ஆயிற்று.

என் வேலையின் ஆரம்ப நாட்களில், எனது சமூக மற்றும் தொடர்புகொள்ளும் திறன் குறைவாயிருந்ததால் பல சச்சரவுகளுக்குள்ளானேன். அப்போது தான் நான் தலைமை போதகருடைய புத்தகமான, "யோசேப்பு, தேவனுடைய உடன்படிக்கையின் வாய்க்கால்" என்ற புத்தகத்தை வாசித்தேன். அது நான் மற்றவர்களுடைய நிலையிலிருந்து என்னை வைத்துப் பார்க்க உதவியது, சரியான ஒழுங்குமுறையில் சரியானபடி அறிக்கைக் கொடுக்கவும், குழப்பங்கள், சச்சரவுகள் இல்லாமல் ஆய்வு செய்யவும் உதவியது.

2017ல், நான் வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சகத்திலிருந்து எனது குழு தலைவர் பரிந்துரையால் பாராட்டுப் பலகையை பெற்றேன். நான் பல்கலைக்கழகத்தில் சீனம் மற்றும் ஆங்கிலம் படித்தேன். இப்போது ஆண்டவருடைய கிருபைக்கு கைமாறு செய்யும்படியாக நான் வேலைசெய்து கொண்டே பட்டதாரி படிப்பை பயில்கிறேன். இந்நாட்களில் ஜப்பானியமும் பயின்று வருகிறேன். எனக்கு கனவுகளைத் தந்து தம் கிருபையில் அவைகளை அடையப்பெற என்னை ஆசீர்வதித்த தேவனுக்கு நான் சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

## "நான் வீடியோ விளையாட்டுகளில் மூழ்கியிருந்தேன், ஆனால் இப்போது நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறேன்!"


சகோதரர் அர்னால்டு சகரியாஸ் மோலினா வெலஸ்கோ, வயது 26, பெரு மான்மின் திருச்சபை

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். எனது பெற்றோர்களின் போதனையின்படி நான் வேதம் வாசித்து ஜெபித்து வந்தேன். பள்ளியில் நன்கு படித்து வந்தேன். என் பெற்றோர்களைப் பிரியப்படுத்தினேன். நான் 11 வயதாயிருக்கும்போது எனது தாய் மரித்துவிட்டார்கள், பிற்பாடு படிக்காமல் அதிகமான நேரத்தையும் பணத்தையும் வீடியோ விளையாட்டுகளில் செலவழித்தேன். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக நான் சபைக்குச் செல்வதை நிறுத்திவிட்டேன்.

2008 நவம்பரில், நான் எனது உறவினர் ஒருவர் மூலமாக பெரு மான்மின் திருச்சபைக்கு வழிநடத்தப்பட்டேன். தலைமை போதகர் அறிவர். ஜோராக் லீ அவர்களது பிரசங்கங்கள் மற்றும் ஆவிக்குரிய அதிகாரம் எனது வாழ்வில் புதுப்பித்தலை கொண்டு வந்தது, நான் வீடியோ விளையாட்டுகளை நிறுத்தினேன். நான் டிசம்பர் 25ல் புதிய நபரானேன்.

நான் ஸ்பானிய மொழியில் திருச்சபை இணையதளத்திலிருந்த தலைமை போதகருடைய செய்திகளை வாசிக்க ஆரம்பித்தேன். நான் அவரது சிலுவையின் செய்தி மற்றும் விசுவாசத்தின் அளவு என்ற புத்தகங்களை வாசித்தேன். நான் அதிகமான கிருபையை பெற்றேன். நான் மானுட வோண்மையில் புதைந்துள்ள தேவனுடைய அன்பையும், ஆண்டவருடைய தியாகத்தில் காட்டப்பட்ட தேவனுடைய ஞானத்தையும், என் வாழ்வின் நோக்கத்தையும் புரிந்துக்கொள்ளலானேன்.


நான் தானியேல் ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெற்றேன். என் கடந்த கால வாழ்வை அறிக்கைச் செய்து மனந்திரும்பி தேவனிடத்தில் மன்னிப்பிற்காக ஜெபித்தேன். நான் தன்னார்வமாக திருச்சபை பணி செய்தேன். தலைமை போதகருடைய பிரசங்கங்களை கேட்டேன். நான் மான்மின் சர்வதேச இறையியல் கலாசாலையில் பாடம் படித்தேன். பிற்பாடு எனது திருச்சபை போதகர் பரிசுத்தமாகுதலின் செய்தியையும், தேவனுடைய வல்லமையையும் பெருவின் பல பகுதிகளில் சொல்வதற்கு ஐந்து ஆண்டுகள் உதவி செய்தேன்.

போதகர் ஹேங்கியோல் கிம் எனது திருச்சபைக்கு வந்தார். நான் அவர் ஸ்பானியத்தில் செய்திகளை ஆயத்தம் செய்ய உதவினேன். இளம் வாலிபர் பணித்தளத்தில் தலைவராகவும் சேவை செய்கிறேன். தேவனுடைய வார்த்தையில் வாழவும், தேவனளித்த எனது கடமைகளை நிறைவேற்றவும் நான் சந்தோஷமாயுள்ளேன். நான் பெரு நாட்டிற்கும் அதின் அண்டை நாடுகளுக்கும் பரிசுத்தமாகுதலின் செய்தியை சொல்லி, தேவனுடைய கிருபையில் அநேக மக்களை வழிநடத்தவும் விரும்புகிறேன். எனக்கு மெய்யான சந்தோஷத்தை அருளிய தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.


















**நிகழ்ச்சி 1: ஆண்டவரின் சிலுவை**

காட்சி 1: அறிமுகம் – இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற காத்திருந்து, அதற்காக ஜெபத்துடன் ஆயத்தமான இளம் வயது இயேசு.

காட்சி 2: நிசி இசைக்குழுவின் இசை

காட்சி 3: மேசியாவிற்காக காத்திருந்த மக்கள்


காட்சி 4: ஆண்டவரின் அன்பு – சீஷர்கள் ஆண்டவரின் ஊழியத்தால் உற்சாமடைந்தனர்

காட்சி 5: ஆண்டவரின் ஜெபம் – இயேசு தனிமையில் கலிலேயா கடலருகே ஜெபித்தார்.

காட்சி 6: ஆண்டவரின் ஊழியம் – குருத் தோலையை ஏந்தி, அவரை மகிழ்ச்சியோடு வரவேற்ற மக்கள்

காட்சி 7: கடைசி பஸ்கா

காட்சி 8: சிலுவையின் பாதை



2018 ஈஸ்டர் கலைநிகழ்ச்சி

# “ஆண்டவரின் சிலுவை”

ஆண்டவரின் சிலுவை என்பது காலத்துவக்கத்திற்கு முன்னமே மறைக்கப்பட்டிருந்த ஓர் இரகசியமாகும்... அவர்தம் அன்பினால் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றி முடித்தார், இந்தக் கடைசி காலத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் இரட்சிப்பின் மகிழ்ச்சியினாலும், பரலோகத்திற்கான நம்பிக்கையினாலும் நிரப்பப்படுவார்களாக!







**நிகழ்ச்சி 2: உயிர்த்தெழுந்த ஆண்டவர்**

காட்சி 9: யூதாஸ்காரியோத்தின் மரணம்

காட்சி 10: ஆண்டவரை நேசித்தவர்கள் – மகதலேனா மரியாளும் கன்னி மரியாளும் ஆண்டவரை அதிகமாய் தவறவிடுகிறார்கள்

காட்சி 11: ஆண்டவரின் உயிர்த்தெழுதல்

காட்சி 12: முடிவு – பரமேறுதல்



GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com